- நீல பொருளாதாரத் துறைகளில் எதிர்கால திட்டங்களுக்கான புதுமையான யோசனைகள், திட்டப் பணிகளுக்கான புதிய பாதைகளை உருவாக்குதல், பல்துறை மற்றும் பன்மொழி ஆராய்ச்சி வழிகளை வளர்த்தெடுப்பர்.
- கடல்சார் அறிவியலில், நிலையான நிதி மற்றும் கடலோர தொழில்நுட்பங்கள் ஆகிய துறைகளில் இந்திய மொழிகளில் கருத்துக்களை உருவாக்கி, அதன் வாயிலாக, தொழில்நுட்ப அறிவை மேலும் மேம்படுத்துவார்கள்.
- சமூகத்தின் தொடர் ஈடுபாடு மற்றும் உள்ளூர்களின் தாக்கத்திற்காக பிராந்திய மொழி ஒருங்கிணைப்பை மையமாகக் கொண்டு, கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை பங்குதாரர்களிடையே ஒத்துழைப்பைத் தொடங்கி அதை வலுப்படுத்தல்.
- இந்திய மொழிகளில் கடல்சார் அறிவியலின் அடிப்படை அறிவுத் தளத்தை வளர்ப்பதில் பங்கேற்று, அதன் சமீபத்திய உலகளாவிய மற்றும் தேசிய முன்னேற்றங்கள் மொழிபெயர்க்கப்பட்டு, திறம்பட பரப்புதலை உறுதி செய்தல்.
- தேசிய கல்விக் கொள்கைளையும் மற்றும் அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் (AICTE) - இன் தொலைநோக்குப் பார்வையையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு, தொழில்நுட்பக் கல்வியில் இந்திய மொழிகளை மேம்படுத்துவதைத் தீவிரமாக ஆதரித்தல்.

வல்லுநர்கள்

- டாக்டர். **அதியமான் பாலகிருஷ்ணன், Retd.**
விஞ்ஞானி-F, தேசிய நடுத்தர வானிலை முன்னறிவிப்பு மையம் (NCMRWF), புவி அறிவியல் அமைச்சகம், உத்தரபிரதேசம்.

- டாக்டர். **டியூன் உஷா,**
விஞ்ஞானி-G, தேசிய கடலோர ஆராய்ச்சி மையம் (NCCR), புவி அறிவியல் அமைச்சகம், சென்னை.

- டாக்டர். **லதா கணேசன், Retd.**
விஞ்ஞானி-G, தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT), புவி அறிவியல் அமைச்சகம், சென்னை.

- டாக்டர். **A.மலர்கொடி,**
விஞ்ஞானி-F, தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT), புவி அறிவியல் அமைச்சகம், சென்னை.

- டாக்டர். **D.சத்தியநாராயணன்,**
விஞ்ஞானி-F, தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT), சென்னை புவி அறிவியல் அமைச்சகம்.

- டாக்டர். **M.கைலாசம்,**
முதன்மை விஞ்ஞானி மற்றும் மீன் வளர்ப்பு பிரிவு தலைவர், ICAR- மத்திய உவர் நீர் மீன் வளர்ப்பு நிறுவனம், சென்னை.

- டாக்டர். **S.சக்திவேல் முருகன்,**
பேராசிரியர், மின்னணுவியல் மற்றும் தொடர்பு பொறியியல் துறை, தேசிய தொழில்நுட்ப ஆசிரியர்கள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (NITTTR), சென்னை.

- டாக்டர். **M. திருஞான சம்பந்தம்,**
கணிணி - அங்கீகாரம் பெற்ற எரிசக்தி தணிக்கையாளர், இயக்குனர் (EnMS & கார்பன் கணக்கியல்), கிரீன்ஃபிஞ்ச் ரியல் எஸ்டேட் பொறியாளர்கள் மற்றும் ஆலோசகர்கள் பிரைவேட் லிமிடெட், சண்டிகர்.

- திருமதி. **தனலட்சுமி,**
திட்ட விஞ்ஞானி - II, தேசிய கடலோர ஆராய்ச்சி மையம் (NCCR), புவி அறிவியல் அமைச்சகம், சென்னை.

- டாக்டர். **V. சோபனா தேவி,**
உதவிப் பேராசிரியர், புவியியல், சுற்றுலா மற்றும் பயண மேலாண்மைத் துறை, சென்னை.

பார்வையாளர்கள்

- ஆராய்ச்சி அறிஞர்கள்
- ஆசிரிய உறுப்பினர்கள்
- தொழில்துறையைச் சேர்ந்த வல்லுநர்கள்

பதிவு விவரங்கள்

Registration Link : https://www.aicte-india.org/atal

- பதிவு செய்வதற்கான கட்டணம் இல்லை.

ஆலோசனைக் குழு உறுப்பினர்கள்

டாக்டர். **ரேவதி வெங்கடராமன்,**
Professor & Chairperson, School of Computing, SRMIST.

டாக்டர். **M.புஷ்பலதா,**
Professor & Associate Chairperson, School of Computing, SRMIST.

ஒருங்கிணைப்பாளர்

டாக்டர். **M.லட்சுமி,**
Professor & Head, Networking and Communications, SRMIST.

இணை ஒருங்கிணைப்பாளர்கள்

டாக்டர். **T.பிரீத்தியா,** Assistant Professor, NWC, SRMIST.

டாக்டர். **G.அபிநயா,** Assistant Professor, NWC, SRMIST.

டாக்டர். **G.ரம்யா,** Assistant Professor, NWC, SRMIST.

தொடர்பு விவரங்கள்

டாக்டர். **M.லட்சுமி,**
பேராசிரியர்,
நெட்வொர்க்கிங் மற்றும் கம்யூனிகேசன்ஸ் துறை,
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்,
காட்டாங்குளத்தூர் - 603 203.

Email id: lakshmim2@srmist.edu.in

INSTITUTION'S INNOVATION COUNCIL (Ministry of Education Initiative) | NWC | School of Computing | SRM INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY

எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்
கணினிப் பள்ளி
நெட்வொர்க்கிங் மற்றும் தொடர்புத் துறை

தேசிய அளவிலான கருத்தரங்கு

நீல நிதியின் எழுச்சி
(தமிழ்)

அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் (AICTE)

10th to 12th செப்டம்பர் 2025

நடைபெறும் இடம்

TP 404 & 405, ஸ்மார்ட் கிளாஸ் ரூம்,
4-வது தளம், டெக்பார்க் 1.

ORGANIZED BY

நெட்வொர்க்கிங் மற்றும் தொடர்புத் துறை
கணினிப்பள்ளி
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்,
காட்டாங்குளத்தூர் – 603 203.

NAAC A++ | Category I with 12B Status | nirf (2024) 12th Ranked University | QS (2025) World Ranking one among 46 Indian Universities | THE (2024) World Ranking one among 91 Indian Universities | QS 4★ VERY GOOD QS 4 Star Rated Globally | SHANGHAI RANKING (2024) World Ranking Ranked 5-7 in Indian Universities

நிறுவனம் பற்றிய தகவல்கள்

SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் 1985-1986 கல்வியாண்டில் தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் மாவட்டம் காட்டாங்குளத்தூரில் SRM பொறியியல் கல்லூரியாகத் தொடங்கப்பட்டது. SRMIST 2003 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது மற்றும் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பீடம் (E&T) உருவாக்கப்பட்டது, இது இப்போது கட்டாங்குளத்தூர், ராமாபுரம், ராமாபுரம் பகுதி மற்றும் மோடிநகர் (புது டெல்லிக்கு அருகில்) ஆகிய நான்கு வெவ்வேறு வளாகங்களில் கட்டிடக்கலை மற்றும் உள்துறை வடிவமைப்பு உள்ளிட்ட பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான அனைத்து பள்ளிகள் மற்றும் துறைகளைக் கொண்டுள்ளது. SRMIST இன் கீழ் உள்ள மற்ற பீடங்களில் மருத்துவம் மற்றும் சுகாதார அறிவியல், அறிவியல் மற்றும் மனிதநேயம், மேலாண்மை, சட்டம் மற்றும் வேளாண் அறிவியல் ஆகியவை அடங்கும். காட்டாங்குளத்தூரின் முக்கிய சில்வன் வளாகம் ஆய்வகங்கள், பட்டறைகள், நூலகம், வகுப்பறைகள், தொழில்நுட்ப பூங்காக்கள் போன்றவற்றிற்காக 1,70,000 சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்ட பசுமையான சூழலைக் கொண்டுள்ளது. நிறுவனத்தில் உள்ள சிறந்த உள்கட்டமைப்பு மற்றும் உலகத்தரம் வாய்ந்த வசதிகள் மாணவர்கள் மற்றும் ஆசிரிய உறுப்பினர்கள் தங்கள் ஆராய்ச்சியை திறமையான முறையில் தொடர உதவுகின்றன. எங்கள் நிறுவனம் பற்றிய கூடுதல் தகவலுக்கு, பின்வரும் URL-ஐ பார்வையிடவும்: **www.srmist.edu.in.**

துறை பற்றி தகவல்கள்

கணினிப் பள்ளியின் கீழ் உள்ள நெட்வொர்க்கிங் மற்றும் தகவல் தொடர்புத் துறை, ஆர்வமுள்ள மாணவர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதையும், வழங்கப்படும் பட்டங்களுக்கு கூடுதல் மதிப்பைச் சேர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. கிளவுட் கம்ப்யூட்டிங், கணினி நெட்வொர்க்குகள், சைபர் பாதுகாப்பு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் போன்ற பாரம்பரிய மற்றும் சமகாலத் துறைகளில் மாணவர்களுக்கு தரமான மற்றும் மதிப்புமிக்க கல்வியை வழங்குவதை இந்தத் துறை உறுதி செய்கிறது. புகழ்பெற்ற ஐடி நிறுவனங்களுடன் இணைந்து இந்தத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இந்தத் துறை தொழில்துறை மற்றும் கல்வி அனுபவமுள்ள ஆசிரிய உறுப்பினர்களின் தொகுப்பைக் கொண்டுள்ளது. துறையின் தீவிர கவனம் அதன் மாணவர்களுக்கான "நெட்வொர்க்குகள்" டொமைன் குறிப்பிட்ட மற்றும் சிறப்பு சார்ந்த வேலைவாய்ப்பு இயக்கங்களில் உள்ளது. SRM இன்னோவேசன் மற்றும் இன்குபேசன் சென்டர் மூலம் தங்கள் புதுமையான யோசனைகளை முன்வைக்க வளரும் ஆர்வலர்களில் தொழில் முனைவோர் திறன்களை இந்தத் துறை வளர்க்கிறது. எங்கள் சர்வதேச மற்றும் முன்னாள் மாணவர்கள் கல்வி - தொழில் - ஆராய்ச்சி ஆகிய மூவருக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதில் ஆர்வத்தை இணைக்கின்றனர்.

கருத்தரங்கு பற்றிய விவரங்கள்

அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் (AICTE) வாணி 2025-26 திட்டத்தின் கீழ் நிதியளிக்கப்பட்ட "நீல நிதியின் எழுச்சி" என்ற கருத்தரங்கு, இந்திய மொழிகளின் மூலம் அறிவைப் பரப்புவதையும் கற்றல் செயல்முறையை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது, விக்ஸித் பாரத் 2047 என்ற கனவை நனவாக்க இது அவசியமாகிறது. பிராந்திய மொழியில் வளர்ந்து வரும் துறைகளைக் கற்கும் போது , அவை குறித்த புரிதல் மேலும் வலுப்படும் என்பது இந்தக் கருத்தரங்கின் நோக்கமாகும். இந்தியாவின் வளர்ச்சிக்காகவும், கடல் வளங்களைப் பயன்படுத்துவதற்கான நம் நாட்டின் உறுதிப்பாட்டிற்கு ஏற்பவும், கடல் சார்ந்த துறைகளின் நிதி, தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்களை ஆராயத் தேவையான அறிவைப் பெறுதல். அதற்கான திறன்களை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் நன்கு உணரும் திறனை அளித்தல் என்பனவற்றை இந்தக் கருத்தரங்கு இலக்காகக் கொண்டுள்ளது. கடலோரப் பகுதிகளை மீட்டெடுத்தல் , கடல்சார் தொழில்நுட்பங்கள், நீலச் சுற்றுலா மற்றும் நிலை நிறுத்த வேண்டிய நிதி நிலை போன்றவை தொடர்பான பிரச்சனைகளைக் கற்பிக்கவும் அவற்றுக்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் ஆசிரியர்களின் திறனை வளர்த்தல் என்பதை இந்த ஒருங்கிணைந்த பல்துறை நிகழ்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. இது கல்வித்துறை - தொழில் துறைப் பரிமாற்றங்களுக்கும் எதிர்காலத்தில் இரண்டும் இணைந்து செயல்படுதற்கும் ஒரு சிறந்த தளத்தையும் வழங்குகிறது.

அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் (AICTE) – வாணிதிட்டம் 2025-26 திட்டம் குறித்து

இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு, 122 முக்கிய மொழிகளையும் 1,599 பிற மொழிகளையும் அடையாளம் கண்டுள்ளது, இதில் 30 மொழிகளை இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான தாய்மொழி பேசுபவர்கள் இருக்கிறார்கள். விக்ஸித் பாரத் 2047 தொலைநோக்குப் பார்வையைச் செயலில் கொண்டு வர பிராந்திய மொழிகள் மூலம் அறிவைப் பரப்புவதும் கற்றல் அனுபவத்தை மேம்படுத்துவதும் அவசியம். இந்திய மொழிகளில் தொழில்நுட்பக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக, கல்வியாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் தங்கள் பிராந்திய மொழியில் தகவல், அனுபவங்கள், யோசனைகள் மற்றும் கண்டுபிடிப்புகளைப் பரிமாறிக் கொள்ள, ஒரு தளத்தை வழங்க வேண்டுமென்பதற்காக அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் (AICTE) வாணி திட்டம் 2025-26 (இந்திய மொழிகளின் முன்னேற்றம் மற்றும் வளர்ப்புக்கான துடிப்பான பரிந்துரை) என்றத் திட்டத்தை தொடங்கியுள்ளது.

குறிக்கோள்கள்

- பிராந்திய மொழியில் (தமிழ்) நடத்தப்படும் ஊடாடும் அமர்வுகள் மூலம் நீலப் பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் கருத்துக்கள் மற்றும் நடைமுறைகளை பங்கேற்பாளர்களுக்கு அறிமுகப்படுத்துதல், உள்ளடக்கிய மற்றும் ஆற்றல் நிறைந்த அறிவு பரிமாற்றத்தை உறுதி செய்தல்.அறிவு பரிமாற்றத்தை உறுதி செய்தல்.
- கடல்சார் தானியங்கியல், நீருக்கடியில் கம்பியில்லாத் தகவல் தொடர்பு மற்றும் மின் சமிக்ஞை (சென்சார்) வலையமைப்புகள் போன்ற புதிய யுக கடல்சார் தொழில்நுட்பங்களைப் பற்றிய ஆழமான நுண்ணறிவுகளை பிராந்திய மொழியில், சூழல்சார்விளக்கங்களுடன் வழங்கும் போது , அது சிறந்த புரிதலுக்கு வழி வகுக்கும்.
- கடல் சுரண்டலின் சுற்றுச்சூழல் தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான வியூகங்களை ஊக்குவித்தல், களஆய்வுகள் மற்றும் நிஷ உலக எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்தி அந்தந்த இடத்திற்கேற்ப, பிராந்திய மொழிகளில் உணர்த்துதல்.
- குறிப்பாக தமிழ்நாட்டுக் கடற்கரைச் சூழலில், கடலோரப் பகுதிகளை மீட்டெடுத்தல், காலநிலைகளுக்கேற்பத் தகவமைத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்த பிராந்திய மொழியில் கருத்துக்களை வெளிப்படுத்தல் வாயிலாக, எளிதாக உணர்த்துதலோடு சமூக ஈடுபட்டை மேம்படுத்தல்.

தலைப்புகள்

1. ஆழ்கடல் தொழில்நுட்பம்
2. நிலையான மீன்வளர்ப்பு
3. கடல்சார்ந்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல்
4. கடல் மாசு மேலாண்மை
5. கடல்சார் தானியங்கியல்
6. கடலோர மீள்தன்மை
7. ஆழ்கடல் சுரங்கம்
8. நீல கார்பன்
9. நீல சுற்றுலாவின் வளர்ச்சி
10. நீருக்கடியில் கம்பியில்லாத் தகவல் தொடர்பு மற்றும் மின்சமிக்ஞை (சென்சார்) வலையமைப்பு

எதிர்நோக்கும் பயன்கள்

கருத்தரங்கின் முடிவில், பங்கேற்பாளர்கள்,

- இந்திய மொழிகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட ஊக்குவிக்கப்படுவார்கள், இதன் மூலம் பிராந்திய பார்வையாளர்கள் அணுகக்கூடிய வளர்ந்து வரும் தொழில்நுட்பம் தொடர்பான பதிவுகளில் பங்களிப்பர்.